அதற்குப்பதில் இங்கேயே உற்பத்தி செய்யலாமா என்பதை அரசாங்கம் பரிசீலித்தது. அண்மையிலே பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டது. அவர்கள் சொல்வதெல்லாம், இங்கே உற்பத்தி செய்து அந்த நாட்டில் கப்பலிலே இறங்கும் பொழுது அங்கேயுள்ள டிசைன்ஸ் அண்ட் மார்க்கெட்டிங் நேச்சர் மாறிவிடுகிறது, எனவே தோலாகவே தாருங்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் புனராலோசனை செய்து வருகிறது.

கட்டடக் கற்கள் வெட்டி எடுக்க உரிமம்.

* 522 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடு கட்டுவதற்குத் தோண்டி எடுக்கப்படுகின்ற கருங்கல் (குவாரி)க்கு ரெவின்யூ இலாக்காவின் மூலம் வரி வசூலிக்கப்படுகின்றதா?

(இ) ஆம் என்றால், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம். கட்டட கற்களையும் பிற சிறு கனிப்பொருள்களையும் வெட்டி எடுப்பதற்கு அனுமதியளிப்பதற்கும் அதற்கான உரிமைத்தொகை வசூலிப்பதற்கும் தமிழ்நாடு சிறுகனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959 விதி 3-ன்படி வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமத் தொகை தமிழ்நாடு சிறு கனிப்பொருள் வழங்கும் விதிமுறைகள் 1959-ல் பின் இணைப்பு இரண்டின்படி விதிக்கப்படுகிறது. இவ்வுரிமத் தொகை ஒரு வண்டி ஒழுங்கு படுத்தப்படாத கல்லுக்கு 25 பைசா வீதமும், உளியினால் சீராக்கப்பட்ட ஒரு வண்டி கல்லுக்கு 50 பைசா வீதமும் விதிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த குவாரியிங் ஸ்டோன்ஸ் விடுவது ஏலத்தில் விடப்படுகிறதா அல்லது அரசாங்கமே நிர்ணயம் செய்து விடப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது புதிதாக இயற்றி இருக்கும் விதிகளின்படி விளம்பரம் செய்யப்பட்டு, யார் யார் மனுதாரர்கள் என்று பார்த்து ஒரு மனுதாரருக்கு மேல் இருக்குமானால் ஆக்ஷனில் விட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

செயற்கைப்பட்டு நூல் விநியோகம்

* 523 வினா—திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு செயற்கைப்பட்டு நூல்களை விநியோகம் செய்யும் முறை மண்டல தனியார் குழுவில் இருந்து வருவதை மாற்றி அரசாங்கம் நேரடியாக நெசவாளர்களுக்கு வழங்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா?

(இ) மேற்படி மண்டல கமிட்டி Regional Committee முறையான விநியோகம் செய்யவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) &(இ) ஆம்.

[1971 டிசம்பர் 17

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : இப்போது பட்டு நூல் விநியோகம் செய்கிற குழுவை மாற்றி அரசே பொறுப்பேற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகித்து வினியோகம் செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வாலண்டரி ஆர்கனைசேஷன். அவர்களாகவே ரீஜினல் கமிட்டி என்று அமைத்து அதன்மூலம் கொடுத்து வந்தார்கள். அதிலே தவறு நடைபெறுகிறது என்ற புகார் வந்தது. அதன் காரணமாக நம்முடைய டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் அவர்களுக்கே பொறுப்பைத் தரவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்தோம். அந்தக் குழுவுக்கு டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸைத் தலைவராகப் போட்டு நடத்திப் பாருங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் இதன் தலைவராக இருக்கிறார்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : செயற்கைப் பட்டு விநியோகம் செய்யும் ரீஜினல் கமிட்டியில் தொழிலாளர் பிரதிநிதிகள் இருக்கிறார்களா ? இல்லையென்றால் அதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் பிரதிநிதிக்கும் இந்த முறைக்கும் சம்பந்தம் இல்லை. யார் யார் உண்மையாகப் பயன்படுத்துகிறார்களோ அவர்களுடைய பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் அதன் தலைவராக இருக்கிறார்.

திரு. இ. எல். தியாகராசன் : கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குத் தமிழ் நாடு நெசவாளர் சங்கம் மூலமாக இதை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அந்த முறையைத்தான் கேட்டிருந்தோம். அவர்கள் அதை ஒத்துக் கொள்ளாத காரணத்தால் இந்தக் குழுவில் நம்முடைய டைரக்டர் இருக்கிறார் என்ற காரணத்தால், அவரே கூட்டுறவுத் துறையின் தலைவராகவும் இருக்கிற காரணத்தால் அந்தப் பயன் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும்.

ஈரோட்டிலுள்ள நூல் பண்படுத்தும் தொழிற்சாலை

* 524 வினா—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் நடைபெறும் நூல் பண்படுத்தும் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. மா. சுப்பிரமணியன் : பார்ன் பிராசசிங் சென்டரில் தினமும் எந்த அளவுக்குத் துணிகளைப் பிராசசிங் செய்கிறார்கள் ? என்னென்ன வகையில் பிராசசிங் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாதம் ஒன்றுக்கு 3 லட்சம் மீட்டர் பிராசசிங் செய்யப்பட்டு வந்ததை 12 லட்சம் அளவுக்கு உயர்த்தலாம் என்பது